அனைவருக்குமானது,

நாடு முழுவதிலும் நாளை (09-நவம்பர்-2020, மு.ப.05.00)க்கு ஊரடங்குச் சட்டமானது தளர்த்தப்படுகின்ற போதிலும், குறிப்பிட்ட சில பகுதிகள் தற்போது நிலவும் கோவிட் -19 தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடு தொடர்ந்தும் “எச்சரிக்கை 3” நிலைமையின் கீழ் இருக்கின்றமையினைக் கருத்திற்கொண்டு மறு அறுவித்தல் வரும் வரை பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் தொடர்பாக பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படும்.

- பல்கலைக்கழகமானது மட்டுப்பாடான சூழ்நிலைகளின் கீழ் தொடர்ந்தும் தொழிற்படுவதுடன், பெரும்பாலும் வீட்டிலிருந்து கடமையாற்றல் மற்றும் நிகழ்நிலை முறைமையினைப் பயன்படுத்தல் போன்றவை நடைமுறைப்படுத்தும்.

- பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள் (மேல்மாகாணம் மற்றும் குருநாகல் மாவட்டம் தவிர) சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களை கடுமையான முறையில் பின்பற்றியவாறு <u>வழமை போல் தொடர்ந்தும் தொழிற்படும்</u>.

- உரிய துறை / பிரிவுகளின் தலைவர்கள் இக்காலப்பகுதியில் மேற்கொள்வதற்கான கடமைகளை அனைத்து தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படை பணியாளர்களுக்கும் வழங்குதல் வேண்டும். அத்தகைய பணியாளர்கள் தாம் வீட்டிலிருந்து ஆற்றும் கடமைகளுக்கான நாளாந்த நாட்குறிப்பேட்டினை பேணுதல் வேண்டும்.

- நாளாந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பிரிவுகளின் தலைவர்கள் எழுத்து மூலமான கடமை பட்டியல் ஒன்றினை வழங்குதல் வேண்டும் என்பதுடன் பணியாளர்கள் தாம் வீட்டிலிருந்து ஆற்றும் கடமைகளுக்கான நாளாந்த நாட்குறிப்பேட்டினை பேணுதல் வேண்டும்.

- பொதுத்தகவல் பிரிவானது மாணவர் உடனடி அழைப்பு இலக்கத்தினை (தொலைபேசி மற்றும் மின்னஞ்சல்) பேணும் என்பதுடன் மாணவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவற்றினை இனங்காண்பதற்காக பணியாளர் ஒருவர் நியமிக்கப்படுவர், இந்த நோக்கத்திற்காக பொது தகவல் பிரிவின் பணியாளர் ஒருவருக்கு கையடக்க தொலைபேசி ஒன்று ஏற்கனவே வழங்கி வைக்கப்பட்டள்ளது. உடனடி அழைப்பு இலக்கமானது பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்பதுடன் மாணவர்களின் மத்தியில் எழும் பிரச்சினைகள், தேவையான நடவடிக்கைகளுக்காக உரிய துறை / பிரிவுகளின் தலைவர்களுக்கு உடனடியாக தெரியப்படுத்தப்படும்.

- இயலுமான வரை திட்டமிடப்பட்ட கூட்டங்கள் அனைத்தும் வழமை போன்று, நிகழ்நிலைத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நடாத்தப்படல் வேண்டும்.

- தேவை / அவசர நிலைமை என்பவற்றினை கருத்திற் கொண்டு பல்கலைக்கழகம் எந்த ஒரு பணியாளரையும் நேரடியாக கடமைக்கு சமூகமளிக்குமாறு அழைக்கப்பட வேண்டி ஏற்படலாம்.

- இந்த இடரான காலப்பகுதியில் இவ்வழிகாட்டல்களை அமுல்படுத்துவதில் அனைத்து பணியாளர்களும் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தங்களினதும் ஏனையோரினதும் பாதுகாப்பிற்காக சுகாதார அமைச்சினால் வழங்கப்படுகின்ற அனைத்து வழிகாட்டல்களையும் தொடர்ந்தும் பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

துணைவேந்தர்,